**<u>இலங்கை புகையிரத சேவை</u>**

**<u>கேள்வி மனுக்கோரல்</u>**

**<u>இலங்கை புகையிரத திணைக்களத்துக்குரிய "கொழும்ப கெதர" தங்குமிடத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக் குழுகேள்வி கோரல்</u>**

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கொழும்பு கோட்டை புகையிரத வளாகத்தில் மிதக்கும் சந்தை தொகுதியில் அமைந்துள்ள "கொழம்ப கெதர தங்குமிட" கட்டிடத்தின் தங்குமிட வசதிகளை நடாத்தி செல்வதற்காக ஐந்து வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதன் பொருட்டு கேள்விதாரர்களிடம் இருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன .

<u>01. தகைமைகள்</u>

I. இந்த ஒப்பந்தம் தொடர்பில் குறித்த வியாபாரம் அல்லது நிறுவனமானது ,வியாபார பெயர் பதிவின் கீழ்/நிறுவன பதிவின் கீழ் இலங்கையினுள் பதிவு செய்யப்பட்டு செல்லுபடியாகும் சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.

II. அனைத்து விண்ணப்பதாரிகளும்/நிறுவனங்களும் இலங்கையினுள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்/நிறுவனங்களில் ஒத்த சேவையினை வழங்கியமை தொடர்பில் குறைந்த பட்சம் இரு வருட அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

III. அனைத்து விண்ணப்பதாரிகள்/நிறுவனங்கள் சுற்றுலா சபையின் செல்லுபடியான பதிவு சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும். (விலை மனுகோரப்படும் திகதிக்கு).

IV. குறித்த வியாபாரத்தினை வெற்றிகரமாக நடாத்தி செல்வதற்கு போதுமான நிதி உறுதிப்பாடு காணப்படுவதினை கடந்த இரு வருடங்களிற்கான கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக அல்லது வங்கி கூற்றின் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும்.

<u>02.கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளல்.</u>

பெறுகை ஆவணங்களை 2024 ஜனவரி மாதம் 16 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத வர்த்தக மற்றும் சந்தைபடுத்தல் அலுவலகத்தில் பெற்று கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தரிற்கு மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணமாக ரூ.2,500/- பணத் தொகையைச் செலுத்தி, பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல்) இற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.கேள்விபடிவக்கட்டணத்திற்கு மேலதிகமாக மீண்டும் செலுத்தப்படும் கேள்வி மனுக்கோரலுக்கான பிணைத்தொகையாக ரூ.610,000.00 வை திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும். அந்த விலை மனுகோரலுக்கான பிணைத்தொகையினை புகையிரத தலைமையகத்தின் பிரதான நிதி உத்தயோகத்தரிற்கு இலங்கையில் செல்லுபடியாகும் பண வடிவில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுசீட்டை (மூல பிரதி) கேள்விமனு விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

<u>03.கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்</u>.

மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்திசெய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல்மூலையில், "**<u>கொழம்ப கெதர தங்குமிடத்திற்கான விலை மனுகோரல்</u>**" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 ஜனவரி மாதம் 17 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னராக கிடைக்கக்கூடிய வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம், புகையிரத தலைமையகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல்) இன் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியிலோ உள்ளிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் அதன் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

04. <u>கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்</u>.

2024 ஜனவரி மாதம் 17 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு மேற்படி மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரியோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமூகமளிப்பதற்கான அனுமதி வழங்கப்படும்.

05. கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்கூறிய கட்டிடத்தை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுவதுடன் அதற்காக பிரதி பொதுமுகமையாளரின் (வர்த்தகம்) அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

06. திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

07. கேள்விதாரர்கள் தேவையான மேலதிக விவரங்களை இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு - 8235)

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ,
புகையிரத தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை ,
கொழும்பு 10